2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில வழித்தடங்களைக் குறிப்பிட்டு, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் வசதிக்காக பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வழித்தடங்களை எழுத்துபூர்வமாகக் கொடுத்தால், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வழங்கி, ஆய்வு செய்து, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் வசதிக்கேற்ப, அந்த வழித்தடங்களில் பேருந்து வசதிகள் இல்லையென்று சொன்னால், அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

கன்னியாகுமரி மாவட்டம், இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இரப்பர் தோட்டக் கழகத்தின்கீழ் பணியாற்றக்கூடிய சுமார் 2,000-க்கும் மேற்பட்ட இரப்பர் தோட்டக்*

கழகத் தொழிலாளர்கள், கடந்த 5 ஆண்டுகளாக ஊதிய உயர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பேச்சுவார்த்தை 50 முறை நடைபெற்றும் அதில் எந்தவிதமான பயனும் இல்லாத காரணத்தால், அந்தத் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில்கூட இரண்டு முறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. 23 ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும் என்று 27-7-2018 அன்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், இதுவரையிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. கலைஞர் அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்திலும் இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்கள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு.என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றவிதமாக இரண்டு வார்த்தைகளில் பேச வேண்டும். நீங்கள், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசுவது போன்று பேசினால் எப்படி? இதே பொருள் குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஆஸ்டின் மற்றும் திரு. செ. ராஜேஷ் குமார் ஆகியோரும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதனால் உங்களது உரையைச் சுருக்கமாக முடியுங்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: கடந்த காலங்களில், இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்ட காலகட்டங்களில், அரசாங்கமே, இரப்பர் தோட்டக் கழகத்திற்கு நிதியை வழங்கி, இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட்டனர். எனவே, இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி, போராடக்கூடிய அந்தத் தொழிலாளர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அரசாங்கம் அவர்களுக்கு நியாயமான ஊதிய உயர்வை வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டு, அரசினுடைய கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், நீங்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள் என்று நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், இதே பொருள் குறித்துதானே பேசப் போகிறீர்கள்!

2020 மார்ச்12]

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 17–2–2020 முதல் அரசு இரப்பர் தோட்டக் கழகத்தினுடைய தொழிலாளர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதனால், நிருவாகத்திற்கு ஒரு நாளைக்கு 14 டன் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தொழிற்சங்கத்தினுடைய நிருவாகிகள் பேசுகின்றபோது, 40 ரூபாய் வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதைத் தொழிற்சங்கங்களும் ஒத்துக்கொண்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதை, ஒத்துக்கொண்டதை, அதிகாரிகள் தற்போது மறுக்கிறார்கள் என்றால், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்தான் அதற்கு இறுதி முடிவு எடுக்க வேண்டும். எனவே, அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற வகையிலும், அந்த நிருவாகத்தினுடைய இழப்பீட்டைத் தடுக்கின்ற வகையிலும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இன்றே அதற்கு ஒரு தீர்வினை ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும், அந்தத் தொழிற்சங்கத்தினுடைய போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு வழி ஏற்படுத்தித் தர வேண்டுமென தங்கள் வாயிலாக அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–2–2020 அன்று முதல், இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் தொடர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே, தமிழக அரசு இதில் தலையிட்டு, அரசு வழங்கலாம் என தெரிவித்த நிலுவைத் தொகை 17 ரூபாயை உடனடியாக வழங்க வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–55

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுடைய நலனைக் காக்கின்ற வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களுடைய ஊதிய உயர்வு பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இரப்பர் தொழிலில் உலகளாவிய அளவில் ஏற்பட்ட விலை வீழ்ச்சியின் காரணமாக, அரசு இரப்பர் தோட்டக் கழகம் நஷ்டத்தில் இயங்கிவரும் நிலையில், தொழிலாளர்கள் நலன்*

கருதி, அடிப்படை ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூபாய் 250/–லிருந்து, 303/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. நாட்டிலேயே, தமிழ்நாடு அரசு இரப்பர் கழகத்தில்தான் தினசரி ஊதியம் அதிகமாக வழங்கப்பட்டு வருகிறது என்பதைப் பேரவைக்கு உங்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு இரப்பர் கழகத்தின் மூலமாக 477.24 ரூபாய் சம்பளமாக வழங்கப்படுகின்றது. தனியார் துறையில் 449.95 ரூபாயாக வழங்கப்படுகின்றது. அதுபோல் கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இதைவிட குறைவாக வழங்குகிறார்கள். நம்முடைய தமிழ்நாடு அரசின் minimum wage 362.74 ரூபாய். இதில் பல கட்டங்களாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதிலே நமது தொழிற்சங்க சட்ட ஒப்பந்தப்படி தொழிலாளர்களுக்கு 1–12–2016 முதல் 30–11–2019 வரை வழங்கப்பட வேண்டிய ஊதிய உடன்பாடுகள் குறித்து உயர்மட்ட அளவில் பேச்சுவார்த்தை பல கட்டங்களாக நடைபெற்ற பிறகு, தொழிலாளர் துணை ஆணையர் திரு. சமரசம், நாகர்கோவில் அவர்கள் முன்னிலையில் தொழில் தகராறு சட்டத்தின்படி, ரூ.23/– உயர்வு வழங்க, 27–7–2018 அன்று ஓர் இடைக்கால ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்தச் சரத்து 5–ன்படி இரப்பர் கழகத் தொழிலாளர்களின் தின ஊதிய உயர்வு உள்ளிட்ட இதர கோரிக்கைகள்மீது வழங்கிய இறுதி உத்தரவு (final order) அடிப்படையில் தொழிலாளர்களுக்கு தின ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகள்மீது அரசின் இறுதி உத்தரவின் (final settlement) அடிப்படையிலேயே ஏற்படுத்தப்படும் என்பது இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன்படி அரசுக்கு நிருவாகத்தின்மூலம் கருத்துரு அனுப்பப்பட்டது. பலகட்ட பரிசீலனைக்குப் பிறகு, இக்கருத்துருவின்படி இடைக்கால ஊதிய உயர்வை இறுதிப்படுத்தியும், இதர கோரிக்கைகளைப் பரிசீலித்தும் அரசாணை எண் 2119 வெளியிடப்பட்டது. இந்த அரசாணையின் அடிப்படையில், இறுதி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துமாறு தொழிலாளர் துறை நிருவாகம் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதனை நிருவாகத் தரப்பில் நடைமுறைப்படுத்த பலமுறை முன்வந்துள்ள நிலையில், தொழிற்சங்கம் தரப்பில் இதனை ஏற்காமல், தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். 17–2–2020 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தினை அறிவித்து, தொடர்ந்து அது நடைபெற்று வருகின்றது. இது தொடர்பாக தொழிலாளர் துணை ஆணையர் திரு. சமரசம், நாகர்கோவில் அவர்களால் நடத்தப்பெற்ற பேச்சுவார்த்தையில், அரசாணையின் அடிப்படையில், இறுதி ஒப்பந்தம் ஏற்படுத்த முன்வருமாறு நிருவாகம் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. தொழிற்சங்கம்

2020 மார்ச்12] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

தரப்பில், தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட ஆணையை இரத்துச் செய்து, மீண்டும் 17+23 வழங்க வேண்டும் எனவும், இதர இனங்கள்மீது பேச்சுவார்த்தைமூலம் தீர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்துகிறார்கள். அறிவிக்கப்பட்ட காலவரையற்ற வேலைநிறுத்தத்தினை கைவிட இயலாது என்று தெரிவித்துள்ளனர். இந்தநிலையில், அரசு இரப்பர் கழகத்தின் 2018–2019 ஆம் நிதியாண்டின் ஒட்டுமொத்த நஷ்டமானது ரூ.23.24 கோடியாகும். மேலும், 2019–2020 ஆம் நிதியாண்டில் 5.94 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அரசு இரப்பர் கழகத்திற்குக் கிடைக்கும் வருவாயில் 65 சதவிகிதம் தொழிலாளர் ஊதியம், சலுகைகள் மற்றும் இதர பணப் பயன்கள் போன்றவற்றுக்காக வழங்கப்பட்டு வருகின்றது. இந்தச் சூழ்நிலையிலும் அரசு இரப்பர் கழகம், அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான ரூ.20 கோடிக்கும் மேல் உள்ளவற்றை உரிய காலத்தில் செலுத்தாமல், அரசு இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் ரூ.23/- உயர்வு வழங்கி, அதிகப்படியான ஊதியம் உரிய நேரத்தில் வழங்கி வருகின்றது. அடிப்படை ஊதியத்தில் ஒரு ரூபாய் உயர்வடைந்தால்கூட, ஒரு வருடத்திற்கு ரூ.4 இலட்சம் கூடுதல் நிதிச் சுமை ஏற்படுகின்றது. 1–12–2016 முதல் 30–11–2019 வரையிலான ஒப்பந்த காலங்களுக்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டியது நிலுவையில் இருக்கின்றது. இந்தக் கடுமையான நஷ்டத்தில்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு வருடா வருடம் தீபாவளி போனசை சட்டப்படி 8.33 சதவிகிதம் உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சரின் கனிவான நடவடிக்கை மூலமாக, கருணைத் தொகை 11.67 சதவிகிதம் என 20 சதவிகிதமாக உயர்த்தி ஒரு வருடத்திற்கு 1.97 கோடி ரூபாய் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலையில், தொழிலாளர்கள் ஒத்துழைக்காமல் தொடர்ந்து போராடுகிறார்கள். இங்கே கோரிக்கை வைத்த மாண்புமிகு உறுப்பினர்கள், தனியார் துறை வழங்குகிற சம்பளத்தையும், அரசு வழங்குகிற சம்பளத்தையும் குறித்து அவர்களிடம் நியாயப்படுத்திப் பேசி, அவர்களை வேலைக்குச் செல்லுமாறு நீங்கள் பணிவோடு கேட்டுக்கொள்ள வேண்டும். இருந்தாலும், ஊதிய உயர்வினைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். முறைப்படி அதற்கு ஒரு கமிட்டியினை அமைத்து அந்தக் கமிட்டியினால் விசாரிக்கப்பட்டு, அந்தக் கமிட்டி தருகின்ற முடிவிற்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.